நகராட்சிஅலுவலகம்
பொன்னேரி

கூட்டம்எண். 08 / 2025 நாள்: 21.11.2025

# <u>சாதாரணக்கூட்டம்</u>

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர்.திருமதி.கே.பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28.11.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
பொன்னேரிநகராட்சி

## <u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>

**<u>பொருள்எண் 1</u>**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் அக்டோபர் 2025 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>** :- பதிவு செய்யலாம்

நகர்மன்ற தீர்மான எண் 784 நாள் 28.11.2025

தீர்மானம் : ஆணையரின் அக்டோபர் 2025 மாத நாட்குறிப்பு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது .

**<u>பொருள்எண் 2</u>**

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் அக்டோபர் 2025 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**: -பதிவு செய்யலாம்.

நகர்மன்ற தீர்மான எண் 785 நாள் 28.11.2025

தீர்மானம் : பொறியாளரின் அக்டோபர் 2025 மாத நாட்குறிப்பு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது .

**<u>பொருள்எண் 3</u>**

பொன்னேரி நகராட்சி, ஆறாவது மாநில நிதிக்குழு மானியம் 2023-2024ன் கீழ் வார்டு எண் 10 தேரடி தெருவில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்தினை இடித்து புதிய பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு ரூ145.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-28 அவர்களின் செயல்முறைகள் கடிதம் எண் ந.க 17712/2025/எம்.ஏ1 நாள் 01.08.2025-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 29.09.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தபுள்ளி வரப்பெற்றது. பின்வருமாறு

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 10 தேரடி தெருவில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்தினை இடித்து புதிய பேருந்து பேருந்து நிலையம் கட்டுதல் | 145.00 | 1. M/S. OS & Co ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.09 % குறைவு |
| | | | 1. M/S. VSS Enterprises ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 18.81% அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள M/S. OS & Co ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் பதிவு செய்திடலாம்.

(ந.க.எண்: 977 /2025/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 786 நாள் 28.11.2025

தீர்மானம் : வார்டு எண் 10 ல் தேரடி தெருவில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்தினை இடித்து புதிய பேருந்து நிலையம் கட்டுதல் - குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள M/S. OS & Co ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கியது – மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது.

**<u>பொருள்எண் 4</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 14 வரையுள்ள பகுதிகளில் தற்போது குடிநீர் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லாத நிலையில் அனைத்து பகுதிகளிலும் ஆங்காங்கே அமைக்கப்பபெற்ற ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலமாகவும், குடிநீர் விநியோக குழாய்கள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பயன்பாட்டிலுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்து குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக மேற்படி மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அதற்கான தோராய செலவினம் ரூ5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

   ( ந.க.எண். 864/2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 787 நாள் 28.11.2025

தீர்மானம் : wd 1 – 14 - வரை ஆழ்துளை குழாய் கிணறுகளில் – நீர்மூழ்கி மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை நீக்க – ரூ 5.00 L மன்றத்தின் அனுமதிக்கு - மன்றம் அனுமதி வழங்குகிறது. செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள்எண் 5</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15 முதல் 27 வரையுள்ள பகுதிகளில் தற்போது குடிநீர் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லாத நிலையில் அனைத்து பகுதிகளிலும் ஆங்காங்கே அமைக்கப்பபெற்ற ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலமாகவும் குடிநீர் விநியோக குழாய்கள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பயன்பாட்டிலுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்து குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக மேற்படி மின் மோட்டார்களை பழுது

நீக்கம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அதற்கான தோராய செலவினம் ரூ5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொதுநிதியின் கீழ் (குடிநீர் நிதி) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

( ந.க.எண். 864/2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 788 நாள் 28.11.2025

தீர்மானம் : wd 15-27 வரை மேற்குறிப்பிட்ட பணிக்கு – செலவினம் ரூ5.00 L பொதுநிதியின் கீழ் – (குடிநீர்நிதி) மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள்எண் 6</u>**

பொன்னேரி நகராட்சி, ஆறாவது மாநில நிதிக்குழு மானியம் 2023-2024ன் கீழ் வார்டு எண் 10 தேரடி தெருவில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்தினை இடித்து புதிய பேருந்து நிலையம் ரூ145.00 இலட்சம் மதிப்பில் கட்டும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி 12.09.2025 அன்று கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் 27.08.2025 அன்று வெளியிடப்பட்டது. விளம்பரம் வெளியிட்ட வகையில் M/S. Swasthik Advertising மூலம் அதற்கான கட்டணம் ரூ.53,340/- வழங்குமாறு பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்காணும் நிறுவனத்திற்கு பொதுநிதியில் இருந்து தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்: 977 /2025/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 789 நாள் 28.11.2025

தீர்மானம் : wd 10 – புதிய பேருந்து நிலைய பணிக்கு விளம்பரத்திற்கு – ரூ 53,340/- பொது நிதியில் வழங்க மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள்எண் 7**

பொன்னேரி நகராட்சி பேரூராட்சியாக இருந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 116/நாள் 07.01.2021ன்படி தேர்வு நிலை பேரூராட்சியில் இருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்நகராட்சி மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின் படி 31,025 மக்கள் தொகை ஆகும். 8.04 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 27 வார்டுகளை உள்ளடக்கியது ஆகும். இந்நகராட்சியில் 69,125 சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் 6 முதல் 27 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் நடைமுறைபடுத்த G.O (D) M: 500/MA SWS (TP2)Dept / நாள் 29.12.16-ன் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் கழிவுநீர் அகற்றுதல் வாரியம் மூலம் பணி நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

எனவே இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்பு, தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்க சட்ட உபவிதிகள் (By – Law) தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் உரிய அனுமதி பெற அனுமதிக்காக

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்: 511/2021/இ1)

நகர்மன்ற தீர்மான எண் : 790 நாள் 28.11.2025

தீர்மானம் : இந்நகராட்சி பகுதியில் – 6 முதல் 27 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு - பணி முடியும் தருவாயில் உள்ளது - குடியிருப்பு தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களுங்க்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்க சட்ட உபவிதிகள் தயார்க்கப்பட்டுள்ளது. பார்வைக்கும் உரிய ‘அனுமதி பெற அனுமதிக்காக – மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள்எண் 8**

பொன்னேரி நகராட்சி பேரூராட்சியாக இருந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 116/நாள் 07.01.2021ன்படி தேர்வு நிலை பேரூராட்சியில் இருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்நகராட்சி மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின் படி 31,025 மக்கள் தொகை ஆகும். 8.04 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 27 வார்டுகளை உள்ளடக்கியது ஆகும். இந்நகராட்சியில் 69,125 கி.மீ சாலைகள்

பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி 1 முதல் 27 வார்டுகளில் குடிநீர் விநியோகத்திற்கான உபவிதிகள் ஏதும் நடைமுறையில் இல்லை.

எனவே இதற்கான சட்ட உபவிதிகள் (By – Law) தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் உரிய அனுமதி பெற அனுமதிக்காக

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்: 1111/2021/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 791 நாள் 28.11.2025

தீர்மானம் : இந்நகராட்சியில் 69,125 கி.மீ சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. 1 முதல் 27 வார்டுகளில் குடிநீர் விநியோகத்திற்கான உபவிதிகள் ஏதும் நடைமுறையில் இல்லை. எனவே இதற்கான சட்ட உபவிதிகள் தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் உரிய அனுமதி பெற அனுமதிக்காக – மன்றம் அனுமதி வழங்குகிறது.

**<u>பொருள்எண் 9</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்16 சிவராஜ் தெருவில் உள்ள கழிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததை இடித்து புதிய கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் அப்பகுதியில் உள்ள பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய கழிப்பிடம் கட்டும் வரை Mobile Toilet அமைத்து தர கோரியதின் பேரில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் M/S. S.K. Sanitaz நிறுவனம் வழங்கிய விலைப்புள்ளியின் தொகை ரூ. 94,400/- ஐ பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

ந.க.எண். 864/2024/இ1

நகர்மன்ற தீர்மான எண் 792 நாள் 28.11.2025

தீர்மானம் : Mobile Toilet அமைத்து தர கோரியதின் பேரில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் M/S. S.K. Sanitaz நிறுவனம் வழங்கிய விலைப்புள்ளியின் தொகை ரூ. 94,400/- ஐ பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள்எண் 10**

பொன்னேரி நகராட்சியில் 24வது வார்டு கண்ணதாசன் தெருவில் சிறப்பு சாலை திட்டம் 2025-2026-ன் கீழ் சாலை அமைத்தல் பணி நடைபெறும் நிலையில் பணிக்கு இடையூறாக உள்ள 2 மின் கம்பங்களை மாற்றி அமைத்து தருமாறு உதவி செயற்பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம், பொன்னேரி அவர்களுக்கு கடிதம் அனுப்பியதில் அதற்கான கட்டணம் ரூ.63,897/- செலுத்துமாறு கேட்பு வரப்பெற்றுள்ளது. பொதுநிதியில் இருந்து தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகர் மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

( ந.க.எண். 282/2021/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 793 நாள் 28.11.2025

தீர்மானம் : wd-24 - 2 மின் கம்பிகளை மாற்றிட – கட்டணம் 63,897 – செலுத்த மன்றம் அனுமதி வழங்குகிறது - நகர் மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு – மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள்எண் 11**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட உலகநாத நாராயணசுவாமி அரசு கலைக்கல்லூரியில் மாண்புமிகு தமிழக முதல்வரின் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் படி சிறப்பு மருத்துவ முகாம் நடத்த அரசாணை எண் 157 நாள் 03.06.2025 ன்படி மருத்துவம்-மக்கள்நல்வாழ்வு ( அஉதி II – 2 ) துறையின் உத்திரவின் படி மாவட்ட ஆட்சித் தலைவர் திருவள்ளூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 4832/இ2/2025 நாள் 29.07.2025ன்படி மருத்துவ சிறப்பு முகாம் 20.09.2025 அன்று நடத்த நகராட்சியின் மூலம் குடிநீர், கூடாரம், இருக்கைகள் மற்றும் இதர அடிப்படை வசதிகள் செய்ய உத்தேச செலவு ரூ.1.00 லட்சத்திற்கு அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கீழ்க்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | அருணாசப்ளையர்ஸ் டிவிபுரம் பொன்னேரி | ரூ.99,000/- |
| 2 | AMTP சப்ளையர்ஸ், பொன்னேரி | ரூ.105000/- |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த அருணா சப்ளையர்ஸ் டிவிபுரம் பொன்னேரி மூலம் பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
 ( ந.க.எண். /2025 /அ1)

நகர்மன்ற தீர்மான எண் 794 நாள் 28.11.2025

தீர்மானம் : மாண்புமிகு தமிழக முதல்வரின் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் படி - 20.09.2025 - அன்று நடத்த நகராட்சியின் மூலம் குடிநீர், கூடாரம், இருக்கைகள் மற்றும் இதர அடிப்படை வசதிகள் செய்ய செலவு ரூ.1.00 L அருணாசப்ளையர்ஸ் மூலம் பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது.

**<u>பொருள்எண் 12</u>**

முதலமைச்சரின் தூய்மை பணியாளர்களுக்கான உணவு வழங்கும் திட்டம் தமிழக அரசால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மூலம் அனைத்து நகராட்சிகளிலும் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்குவது தொடர்பான பணிக்கு ஒப்பந்தபுள்ளி 21.11.25 அன்று நடைபெறும் என கடித ந.க.எண். 29143/2025/எச்3 நாள் 05.11.2025-ன்படி நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இப்பணியானது மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ந்து நடைபெறும் என அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொன்னேரி நகராட்சியில் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு உணவு வழங்கிட உத்தேச செலவினம் ரூ.77.00 இலட்சம் செலவாகும் என கணக்கிடப்ட்டுள்ளது. இப்பணி அரசின் கொள்கை முடிவு என்பதால் நகராட்சியில் செயல்படுத்தவும் இச்செலவினம் நகராட்சி நிதியில் செலவிட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் நகராட்சிநிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
 (ந.க.எண் 1116/2025/எச்1)

நகர்மன்ற தீர்மான எண் 795 நாள் 28.11.2025

தீர்மானம் : முதலமைச்சரின் தூய்மை பணியாளர்களுக்கான உணவு வழங்கும் திட்டம் அரசின் கொள்கை முடிவு என்பதால் நகராட்சியின் செயல்படுத்தவும் இச்செலவினம் நகராட்சி நிதியில் செலவிட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் 1, மன்றம் அனுமதிக்கலாம் 2. பணியின் அவசரம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

**<u>பொருள்எண் 13</u>**

பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட பகுதியான பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் 6வது மாநில நிதிக்குழு மானியம் திட்டத்தின் கீழ் கடைகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. பழைய பேருந்து நிலையத்தில் (அண்ணா சிலை அருகில்) தற்போது இயங்கி கொண்டிருக்கும் கடைகளுக்கு மாற்று இடமாக பழைய மீன் மார்கெட் பகுதியில் உள்ள கடைகளில் உள்ள Rolling Shuter மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செவினம் ரூ 50,000/- பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்

( ந.க.எண். 864/2024இ1)

நகர்மன்ற தீர்மான எண் 796 நாள் 28.11.2025

தீர்மானம் : பழைய பேருந்து நிலையத்தில் - தற்போது இயங்கி கொண்டிருக்கும் கடைகளுக்கு மாற்று இடமாக பழைய மீன் மார்கெட் பகுதியில் - உள்ள கடைகளில் உள்ள Rolling Shuter மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செவினம் ரூ 50,000/- பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு - மன்றம் அனுமதி வழங்குகிறது

**<u>பொருள்எண் 14</u>**

அரசாணை (நிலை) எண்.116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.07.12.2021-ன் படி பொன்னேரி தேர்வு நிலை பேரூராட்சியிலிருந்து 2ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட 2ம் நிலை நகராட்சிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 10 நாள் 23.01.2023 ன்படி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 1 தட்டச்சர் பணியிடம் நிரப்பப்படாமல்

காலியாக உள்ளது. இந்நிலையில் அனைத்து நிர்வாக பணிகள் கணினி மயமாக்கப்பட்டதால் தினசரி கணினி வசூல் மையத்தில் வரிவசூல் பணி மேற்கொள்ளுதல், அலுவலகப்பணிகள், திட்டப்பணிகள், தேர்தல் பணிகள், நகர்மன்ற பணிகளை இணையத்தில் பதிவேற்றம் செய்யவும், அறிக்கைகள் தயாரித்து தட்டச்சு செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள நகராட்சி பணியாளர்கள் இல்லாததால் கணினி தொடர்பான அனைத்து பணிகள் மேற்கொள்ள தேவையான புள்ளி விவரக்குறிப்பாளரை வெளிக்கொணர்வு (Out Sourcing) முறையில் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்திக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ. 5.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண். 756/2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 797 நாள் 28.11.2025

தீர்மானம் : கணினி தொடர்பான அனைத்து பணிகள் மேற்கொள்ள தேவையான புள்ளி விவரக் குறிப்பாளரை வெளிக்கொணர்வு முறையில் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்திக்கொள்ளவும் உத்தேச செலவினம் ரூ. 5.75 L மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள்எண் 15</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லாத நிலையில் அனைத்து பகுதிகளிலும் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 67 எண்ணிக்கையிலான ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலமாகவும், குடிநீர் விநியோகக் குழாய்கள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு விநியோகிக்கப்படும் குடிநீர் பைப்லைன்கள் பழுதுநீக்கம் செய்ய ஓராண்டுக்கு ஒப்பந்ததாரரை தேர்வு செய்ய அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. குடிநீர் பணியின் அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் .

2. மேற்படி பணிக்கான செலவினத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 864 /2024 / இ1)

நகர்மன்ற தீர்மான எண் 798 நாள் 28.11.2025

தீர்மானம் : குடிநீர் பைப்லைன்கள் பழுது நீக்கம் செய்ய ஓராண்டுக்கு ஒப்பந்ததாரரை தேர்வு செய்ய அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 L க்கு மன்றம் அனுமதி அளிக்கிறது. செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கிறது.

<u>**பொருள்எண் 16**</u>

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2025-2026ன் கீழ் 4 மாத காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் டெங்கு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள 24 பணியாளர்களை வழங்குதல் பணிக்கு இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண் 6/2021/எச்1 நாள் 05/11/2025-ன்படி ஒப்பந்தபுள்ளி online மூலமாக 19/11/2025 அன்று நடைபெற்றதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | பொன்னேரி நகராட்சியில் 4 மாத காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் டெங்கு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள 24 பணியாளர்களை வழங்குதல் பணி | 19.00 | 1. M/S. Excellent Enterprises | -7.06% குறைவு |
| | | | 2. M/S. Vibrant Foundation | -3.33% குறைவு |
| | | | 3. M/S. Blue Moon Enterprises | -0.15% குறைவு |
| | | | 4. M/S. Green Ethics Pvt. Ltd., | 7.31% அதிகம் |
| | | | 5. M/S. Green Services Trust | 10.11% அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள M/S. Excellent Enterprises -7.06% விலை குறைவு ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் , முடிவிற்கும் வைக்கப்படுகிறது. மதிப்பீட்டை விட மிக குறைவாக உள்ளதால் ரத்து செய்து தற்போது உள்ள மகளிர் சுயஉதவி குழு மூலம் தொடரலாம்

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

( ந.க.எண். 6/2021/எச்1)

நகர்மன்ற தீர்மான எண் 799 நாள் 28.11.2025

தீர்மானம் : பொதுநிதியின் கீழ் 4 மாத காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் டெங்கு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள 24 பணியாளர்களை வழங்குதல் பணிக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள M/S. Excellent Enterprises -7.06% விலை குறைவு ஒப்பந்ததாரருக்கு மதிப்பீட்டை விட மிக குறைவாக உள்ளதால் ரத்து செய்து தற்போது உள்ள மகளிர் சுயஉதவி குழு மூலம் தொடரலாம் - மன்றம் அனுமதிக்கிறது.

**<u>பொருள்எண் 17</u>**

தமிழக அரசின் பொற்கால ஆட்சியில் பொன்னேரி நகராட்சியின் சாதனைகள் என தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் முக்கிய பணிகள் தொடர்பான விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. விளம்பரம் வெளியிட்ட வகையில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விளம்பர கட்டணம் வழங்குமாறு Invoice வரப்பெற்றது. பின்வரும் விவரப்படி சமர்பிக்கப்படுகிறது.

பொதுநிதியில் இருந்து தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | நாளிதழ் | விளம்பரம் வெளியிட்ட நாள் | கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | The Daily Thanthi | 01.10.2025 | 13860/- |
| 2. | Evening Tamil Nadu | 19.10.2025 | 23100/- |
| 3. | KAL PUBLICATION PVT. LTD. | 01.10.2025 | 33000/- |
| 4/ | Malar Publication Ltd., | 18.10.2025 | 15000/- |
| | | **மொத்தம்** | **84960/-** |

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

   ( ந.க.எண். 1110 /2025/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 800 நாள் 28.11.2025

தீர்மானம் : தமிழக அரசின் பொற்கால ஆட்சியில் பொன்னேரி நகராட்சியின் சாதனைகள் என தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் முக்கிய பணிகள் தொடர்பான விளம்பரம் வெளியிட்ட வகையில் பொதுநிதியில் இருந்து தொகை வழங்கிட மன்றம் அனுமதிக்கிறது – மன்றம் அனுமதி வழங்குகிறது.

**<u>பொருள்எண் 18</u>**

இந்நகராட்சியில் 2ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 10 நாள் 23.01.2023 ன்படி பொறியியல் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 1 பணி ஆய்வாளர் பணியிடங்கள்

நிரப்பப்படாமல் இருப்பதால் தனியார் வெளிக்கொணர்வு முறையில் (Out Sourcing) முறையில் இரண்டு எண்ணிக்கை தொழில்நுட்ப பணியாளர்கள், ஒரு எண்ணிக்கை Data Entry பணியாளர் மற்றும் ஓட்டுநர் பணியமர்த்திக் கொள்ள ரூ.8.80 இலட்சத்திற்கு ஆறுமாத காலத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

   ( ந.க.எண். 864/2024/இ1 )

நகர்மன்ற தீர்மான எண் 801 நாள் 28.11.2025

தீர்மானம் : பொறியியல் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் Out Sourcing முறையில் பணியமர்த்திக் கொள்ள ரூ.8.80L ற்க்கு ஆறுமாத காலத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது.

**<u>மேசைப்பொருள்எண் 19</u>**

முதலமைச்சர் தூய்மை பணியாளர்களுக்கான உணவு வழங்கும் திட்டம் தமிழக அரசால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் மூலமாக அனைத்து நகராட்சிகளிலும் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்குவது தொடர்பான பணிக்கு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு ந.க.எண். 29143/2025/எச்3 நாள் 05.11.2025-ன்படி 21.11.2025 அன்று வரப்பெற்றது. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை அரசாணை (4 ப) எண் . 56 நாள். 21.11.2025 மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் .

1) M/S. Arudra Corp. 0.19% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு

மேற்கண்ட பணிக்கு இரண்டு ஒப்பந்தபுள்ளி வரப்பெற்றது. இரண்டாவது ஒப்பந்தபுள்ளி தகுதி காண் பட்டியலில் உரிய ஆவணங்கள் இணைக்கப்படாததால் ரத்து செய்யப்பட்டது. இப்பணி அரசு திட்டப்பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

1. வரிசை எண்: 1-ல் கண்ட குறைவு ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்
2. அரசாணை எண் : (4.ப) எண்.56 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை நாள். 21.11.2025-ன்படி செலவினம் நகராட்சி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

   (ந.க.எண் 1116/2025/எச்1)

நகர்மன்ற தீர்மான எண் 802 நாள் 28.11.2025

தீர்மானம் : 1. வரிசை எண் 1 – ல் கண்ட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

2 . அரசாணை எண் : (4.ப) எண்.56 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை நாள். 21.11.2025 செலவினம் நகராட்சி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

<u>மேசைப்பொருள்எண் 20</u>

உள்ளாட்சி நிதித்தணிக்கை சட்டம் 2014 பிரிவு எண் 7(1 ) ன் படி உள்ளாட்சி நிறுவனங்களின் ஆண்டு கணக்குகள் நிதியாண்டு முடிவடையும் மூன்று மாதத்திற்குள் தணிக்கைக்காக நிர்வாக அதிகாரியால் தயாரித்து அனுப்பப்பட வேண்டும் எனவும் பொன்னேரி நகராட்சியின் 2024-25 ஆம் ஆண்டு கணக்குகளை 15.07.2025க்குள் அனுப்பி வைத்திட உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்களின் கடிதம் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி 2024-25ம் ஆண்டு தணிக்கைக்கு Journal Book, General Ledger, Trial Balance, Balance sheetபோன்ற கணக்குகள் தயாரிக்க Data Entry செய்யும் பணியினை மேற்கொள்ள RMS Account Consultant, Chennai நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இந்நகராட்சி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பில் பட்டியலில் பிடித்தம் செய்த வருமான வரி, சரக்கு மற்றும் சேவை வரி Preparation and Filling ETDS FY 2025 26 ஆம் ஆண்டிற்கு மூன்று மாதத்திற்கு ஒருமுறை Preparation and Filling தாக்கல் செய்வதற்கு தமிழ்நாடு மாநில கணக்கியல் மற்றும் கூட்டுறவு சங்கம் லிமிடெட் மூலம் பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ. 2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்டசெலவினம்வருவாய்நிதியிலிருந்துமேற்கொள்ளவும், மேற்கண்ட நிறுவன ம்மற்றும் கூட்டுறவு நிறுவனத்திற்கு தொகை வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

(ந.க. எண் 658/2022/பி1)

நகர்மன்ற தீர்மான எண் 803 நாள் 28.11.2025

தீர்மானம் : 2024-25 ஆம் ஆண்டு தணிக்கைக்கு செய்யும் பணியினை மேற்கொள்ள RMS Account Consultant நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பில் பட்டியலில் பிடித்தம் செய்து தமிழ்நாடு கணக்கியல் மற்றும் கூட்டுறவு சங்கம் லிமிடெட் மூலம் பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ. 2.50 L - மன்ற அனுமதியோடு செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், தொகை வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கிறது

**<u>மேசைப்பொருள்எண் 21</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 1274/2024/அ2 நாள் 28.10.2025-ன்படி நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்களை இணைய வழி செலுத்தும் முறைகள் தொடர்பான பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏறப்டுத்தும் வகையில் சொத்துவரி செலுத்தும் இணையதளம், மொபைல் ஆப், UPI , QR Code / டெபிட், கிரேட் கார்ட் , நெட்பேங்கிக் போன்ற வழி முறைகள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் போஸ்ட்ர்கள் ஒட்டவும், உள்ளூர் ஊடகங்கள், SMS, Whatsapp மூலமாக அறிவிப்புகள் செய்து விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல், பொது இடங்களில், ஆட்டோ மூலம் விளம்பரம் செய்தல் விளக்கக்காட்சிகள் ஏற்பாடு செய்தல், பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் Help Desk, FAQ வழிகாட்டிகள் ஏற்பாடு செய்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.2.50 இலட்சத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:**

1. மன்றம்அனுமதிஅளிக்கலாம்
2. மேற்கண்ட செலவினம் வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண் /2022/பி1)

நகர்மன்ற தீர்மான எண் 804 நாள் 28.11.2025

தீர்மானம் : 28.10.2025-ன்படி நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்களை இணைய வழி செலுத்தும் முறைகள் தொடர்பாக - தோராய செலவினம் ரூ.2.50L பொதுநிதியில் மேற்கொள்ளவும் - மன்ற அனுமதியோடு செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கிறது

**<u>மேசைப்பொருள்எண் 22</u>**

பொன்னேரி நகராட்சியில் மொத்தம் 27 வார்டுகள் 238 தெருக்கள் 36,398 மக்கள் தொகை உள்ளது. மேற்கண்ட வார்டுகளில் உள்ள தெருக்களில் வீடு வீடாக புகை மருந்து அடிக்கும் பணி மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட 5 புகை பரப்பும் இயந்திரங்கள் பழுதடைந்துள்ளது. மேலும் பக்கவாட்டு கால்வாய்களில் கொசு புழுக்கள் உற்பத்தியை கட்டுப்படுத்தும் பொருட்டு ஏற்கனவே உள்ள 1. Hand Sprayer மற்றும் கூடுதலாக 1 Hand Sprayer தேவைப்படும் பொருட்டு பொது சுகாதார அவசர அவசியம் கருதி 5 புகை பரப்பும் இயந்திரங்கள் பழுது நீக்குதல் மற்றும் புதியதாக ஒன்று கொள்முதல் செய்ய தோராயமாக ரூ.2.00 இலட்சம் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:

1. **மன்றம் அனுமதி அளிக்கலாம்**
2. **மேற்கண்ட செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,**
   **மன்றம் அங்கீகரிக்கலாம்.**

(ந.க.எண் /2025/எச்1)

நகர்மன்ற தீர்மான எண் 805 நாள் 28.11.2025

தீர்மானம் : பொது சுகாதார அவசர அவசியம் கருதி 5 புகை பரப்பும் இயந்திரங்கள் பழுது நீக்குதல் மற்றும் புதியதாக ஒன்று கொள்முதல் செய்ய ரூ.2.00L - பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

**<u>மேசைப்பொருள்எண் 23</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 21-ல் இரட்டைமலை சீனிவாசன் தெருவில் உள்ள குடிநீர் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு சுமார் 25 ஆண்டுகளாகிறது. தற்போது இந்த ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் மாசுபட்டுள்ளதாக தெரிய வருகிறது. எனவே இந்த ஆழ்துளை கிணற்றுக்கு பதிலாக புதியதாக அண்ணா தெருவில் ஆழ்துளை கிணறு அமைக்க மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் குடிநீர் அவசியம் கருதி பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு குறுகிய கால ஒப்பந்தபுள்ளி கோரி பணி செய்து முடிக்கலாம் அனுமதிக்காக.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்கண்ட பணியினை நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்
   (ந.க.எண். 864/2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 806 நாள் 28.11.2025

தீர்மானம் : வார்டு 21 - புதியதாக அண்ணா தெருவில் ஆழ்துளை கிணறு அமைக்க மதிப்பீடு ரூ.3.00L குறுகிய கால ஒப்பந்தபுள்ளி கோரி பணி செய்து முடிக்க – மன்றம் அனுமதிக்கிறது. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த புள்ளி கோரியதை - நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்குகிறது.

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.